SRI B. K. NALLASWAMI :—" Sir, may I bring it to the notice of the Hon. Minister that the default is due to failure of the monsoon and so the default should not be taken into consideration and the order should be dropped."

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" Sir, I do not know which is the order that the hon. Member wants to be dropped. I presume it is in regard to the deposit. Whenever there has been a default on the part of a consumer, we have examined whether it was due to lack of water in the well or due to other causes. If the consumers got the necessary certificate from village officers in regard to the lack of water in the well, we grant liberal rebates."

SRI M. KALYANASUNDARAM :—" கனம் மந்திரி அவர்கள் சொன்ன பதில் வேறு, கேட்ட கேள்வியும் வேறு. விவசாயிகள் கொடுத்த கட்டணம் இரண்டு மாத அட்வான்ஸாக வாங்கியிருக்கிறார்கள். நண்பர் ஸ்ரீ ஆறுமுகம் சொன்னது இதுவரை 1 ஹார்ஸ் பவருக்கு 50 ரூபாய், 10, 15 வருஷத்திற்கு முன் வாங்கப்பட்டது இன்னும் திருப்பிக் கொடுக்கப்படவில்லை என்று சொன்னார். ரெண்ட் ரிகவரி ஆக்ட் பிரகாரம் அதை வசூல் செய்ய முடியும் என்று சொன்னார். அம்மாதிரி கட்டணம் செலுத்தாவிட்டால் கனெக்ஷனைக் கட் செய்துவிடுவார்கள் என்று கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள். ஆதலால் இவ்வாறு இரண்டு மாத அட்வான்ஸ் நிபந்தனையை வற்புறுத்தக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்."

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" டெபாசிட் வேண்டியதில்லை என்று சொல்வதற்கு இந்தச் சட்டத்தில் இடம் இல்லை. இதைப்பற்றி பரிசீலனை செய்துவந்திருக்கிறோம், ஆடிட் போன்ற சில விஷயங்கள் இருப்பதனால் அரசாங்கம் இதைத் தீர ஆலோசித்து ஒரு முடிவுக்கு வரும்."

Admission to training schools.

* 852 *Q.*—SRI M. KATTIMUTHU : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) how many students were admitted into the Non-basic and the Basic Training Schools at Cuddalore New Town and the Higher and Secondary Grade Training School at Villupuram in South Arcot district in the year 1954–55;

(*b*) the basis on which they were selected for admission into the schools; and

(*c*) how many of them are Harijans?

THE HON. SRI C. SUBRAMANIAM :—" (*a*) Details of admission are given below :—

Government Non-basic and Basic Training schools at Cuddalore.	Government Higher and Secondary Grade Training School, Villupuram.
120 (80 Junior basic and 40 Senior basic.)	**89 (44 Higher Grade and 45 Secondary Grade.)**

" (*b*) Different principles were adopted for the selection of students for the different courses, namely, Elementary, Secondary, Junior basic and Senior basic Training Courses. Harijan and Backward Community candidates were given

special consideration. In respect of the Basic Tarining schools, candidates from the compact area around the training schools were preferred.

" (c) 19 and 13 out of 120 and 89 respectively, were Harijans."

SRI M. KATTIMUTHU ;—" பேசிக் டிரெயினிங் பள்ளிக்கூடங்களில் செலெக்ஷன் கமிட்டி வைத்திருப்பதுபோல நான்-பேசிக் பள்ளிக்கூடங்களிலும் செலெக்ஷன் கமிட்டியை ஏற்படுத்தி மாணவர்களை அனுமதிக்க ஏற்பாடு செய்வார்களா ? அந்த கமிட்டியில் ஹரிஜன அங்கத்தினரை சேர்த்துக்கொள்ள ஏற்பாடு செய்வார்களா ? 4-வது, 5-வது பாரத்தில் பெயில (fail) ஆனவர்களை போதனு முறையில் பயிற்சி அளிப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" இந்த விஷயம் உங்கள் கேள்வியில் இல்லாத போதிலும் உங்கள் அபிப்பிராயத்தைப் பரிசீலனை செய்கிறோம்."

SRI A. RATNAM :—" இதுவரை கடலூரில் உள்ள பேசிக் டிரெயினிங் பள்ளியில் படிக்கும் மாணவர்களை எந்த திட்டத்தில் அனுமதித்திருக்கிறார்கள். சேருவதற்கு நூற்றுக்கணக்கான மாணவர்களிடமிருந்து மனுக்கள் வந்திருந்தாலும்கூட, அவர்களை கவனிக்காமல் ஒவ்வொரு எம்.எல்.ஏ-யும் 4 பேரை சிபார்சு செய்வது வழக்கமாக இருக்கிறதா ? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" ஸ்ரீ ரத்தினம் அவர்கள் எத்தனை பேர்களை இம்மாதிரி சிபார்சு செய்திருக்கிறார். காம்பாக்ட் ஏரியாவில் உள்ள பேசிக் டிரெயினிங் ஆசிரியர்களுக்கு ஆதாரப் பயிற்சி அவசியமாயிருப்பதால் அப் பயிற்சி பெற்றவர்களை மாத்திரம் அனுமதிக்கப்படுகிறது."

SRI V. R. NAGARAJAN :—" The Selection Committee for 8-50 a.m. the non-basic training school existing at Villupuram should include representatives of the entire Villupuram taluk area as otherwise persons have to go to Cuddalore for making certain representations with regard to candidates coming from rural areas. This is a long-standing grievance and may I know whether the Government will look into the matter? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" When we select members for the Selection Committees wherever they are constituted, it is not for the purpose of giving preference to candidates coming from a particular area. The members of the committees are expected to go into the merits of each candidate and select them for admission. I do not think we can go on a regional basis in the matter of selection of members for these committees."

SRI S. RADHAKRISHNAN :—" இந்த டிரெயினிங் ஸ்கூலில் மாணவர்களைச் சேர்க்கும்போது பெரியவர்களுடைய சிபாரிசின் பேரில் மாணவர்களை எடுப்பதால் வருஷ அரம்பத்தில் பெரிய மனிதர்களுடைய வீட்டில் மாணவர்கள் படையெடுக்கிறார்கள். அதைப் பார்த்தால் அவர்களுடைய வீட்டில் சத்யாக்ரகம் செய்வது போலும் இருக்கிறது. அப்படி மூன்று மாதங்கள் நடைபெறுகின்றன. இது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படித் தெரிந்திருந்தால் இந்த நிலைமையை மாற்றி அமைப்பார்களா ? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" கனம் அங்கத்தினர் கொடுத்த தகவல் இதுவரையில் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. இப்பொழுதுதான் முதன் முதலாக கொண்டுவரப்படுகிறது. இப்பொழுது சட்ட சபைக்குக் கொண்டுவந்த மாதிரி இதற்கு முன்னால் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருந்தால் அதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கலாம்."

SRI A. RATNAM :—" On a point of personal explanation, Sir, நான் கடலூர் ஹரிஜன எம்.எல் ஏ-வாக இருந்தாலும் என்னுடைய வேண்டுகோளை ஏற்றுக்கொள்வதும் கிடையாது. நானும் யாரிடமும் சிபாரிசுக்குப் போனதும் கிடையாது. சில அதிகாரிகள் அனுப்பும் மாணவர்களை அந்த டிரெயினிங் ஸ்கூலில் எடுத்துக்கொள்கிறார்கள். அதனால் தாழ்த்தப்பட்ட மாணவர்களும், ஏழை மாணவர்களும் வெகுவாக பாதிக்கப்படுகிறார்கள். அதனால் ஹரிஜன மாணவர்களுக்கு அதிகப்படியான செலவு ஏற்படுகிறது. தகுதி வாய்ந்த மாணவர்கள் பயிற்சி பெறுவதற்கு அவர்களை ஸ்கூலில் எடுத்துக்கொள்வதும் கிடையாது. இனியாவது இதை கவனித்து கனம் மந்திரி அவர்கள் நடவடிக்கை எடுத்து ஒரு கமிட்டியை எடுத்து நியமிப்பார்களா ? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" கனம் அங்கத்தினர் சொல்வதில் ஆதாரம் இல்லை என்று நான் நினைக்கிறேன். கடந்த 6, 7 மாதங்களாக எந்த விதமான புகாரும் வரவில்லை. இப்பொழுது தான் முதல் தடவையாக சட்டசபையில் சொல்லுகிறார்கள். இதில் ஏதாகிலும் குறையிருந்தால் அதைப் பரிசீலனை செய்து பார்த்து அடுத்த வருஷத்தில் அப்படிப்பட்ட புகார்கள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள ஏற்பாடு செய்கிறேன்."

SRI M. JAGANNATHAN :—" If the information is readily available with the Hon. the Minister for Education, may I know how many applications were received from Harijan students and how many of them were selected? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" I do not have separate figures for Harijan students. If the hon. Member is interested in it, he may put a separate question."

SRI S. R. ARUMUGAM :—" இந்த ஹையர் கிரேட் டிரெயினிங்குக்குப் பொறுக்கும்போது ஐந்தாவது பாரம் படித்தவர்களுக்கு முதல் சலுகையும், நாலாவது பாரம் படித்தவர்களுக்கு அடுத்த சலுகையும் கொடுக்கப்படுகிறது. மூன்றாவது பாரம் படித்தவர்களை எடுத்துக்கொள்வது இல்லை. ஆனால் VIII standard படித்தவர்களை எடுத்துக்கொள்ளுகின்றார்கள். அது அவர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அதனால் ஹரிஜன மாணவர்கள் மூன்றாவது பாரம் படித்தாலும் அவர்களையும் அதிகமாக எடுத்துக்கொண்டு பாதுகாப்பு அளிக்கவேண்டும். இந்த நிபந்தனையினால் அவர்கள் டிரெயினிங்குக்கு போக முடியாமல் கஷ்டத்திற்குள்ளாகின்றார்கள். ஆகையால் சர்க்கார் மூன்றாவது பாரம் படித்த மாணவர்களுக்கும் மற்ற மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் சலுகையைக் கொடுத்து ஸ்கூலில் எடுத்துக் கொள்வதற்கு சட்டத்தை மாற்றி அமைப்பார்களா ? அதற்கு வேண்டிய யோசனையையும் சர்க்கார் செய்வார்களா ? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" ஹரிஜனங்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு போதுமான படிப்பு இருந்தால் அவர்களுக்கு முதல் சலுகை கொடுத்து வருகிறார்கள். அதனால் அவர்களுக்கென்று தனியாக ரூல்களை மாற்றவேண்டியதில்லை என்று நினைக்கிறேன்."

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" Sir, when candidates are selected for the elementary training courses, students who have passed the VIII standard are being given preference, as has already been pointed out by hon. Member Sri S. R. Arumugam, and not students who have passed III Form or even IV or V Forms or failed S.S.L.Cs. The cases of untrained teachers who have put in a long service as teachers in elementary schools are not taken into consideration also. Therefore, will the Hon. Minister be kind enough to evolve certain principles in the matter of selection of candidates for the training schools? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" I shall certainly look into the matter. But as far as basic training schools are concerned, we have to give preference to candidates from the compact area around the training schools. With regard to the other training schools, I shall certainly look into the matter brought to my notice by the hon. Member."

SRI K. PARTHASARATHY :—" May I know whether it is a fact that there are two training schools exclusively for women at Cuddalore and, if so, what are the reasons for admitting girl students in the training school at Manjakuppam? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" I cannot carry in my memory all the facts relating to all the schools. A separate question may be put."

SRI D. KRISHNAMOORTHY GOUNDER :—" இனிமேலாவது பிற்பட்ட வகுப்பாருக்கும் ஹரிஜனங்களுக்கும் அதிக விகிதாசாரப்படி ஸ்தானங்களை ஒதுக்க முடியுமா என்பதை கனம் மந்திரி அவர்கள் சொல்வார்களா ? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" இப்பொழுதே போதுமான அளவு ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. "

SRI S. PANCHAKSHARAM :—" To avoid all these troubles, may I know whether the Government will make a rule that S.S.L.Cs. alone will be eligible for admission and in the case of non-S.S.L.Cs. persons with two years service as teachers will be eligible, of course, with reservation for Backward Classes and Harijans? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" The question of the abolition of the elementary grade is under the consideration of the Government. As a matter of fact, the intention of the Government is to have only secondary grade teachers in all schools. But that will take some time and we cannot make a change all of a sudden creating difficulties in certain categories of persons."

SRI K. ARANGANATHAN :—" பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் அறிதாக தென்னாற்காடு ஜில்லாவில் இருப்பதால், தென்னாற்காடு ஜில்லாவிலுள்ள பயிற்சி பள்ளிக்கூடங்களில் சென்ற வருஷ நடைமுறையிலுருந்த எண்ணிக்கையை இப்பொழுது குறைத்துவிட்டார்கள். மீண்டும் அந்த எண்ணிக்கையை அரசாங்கம் அதிகப்படுத்தக்கூடுமா என்று கேட்கிறேன். "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" The requirements of the district will be taken into consideration and the number of training schools will be adjusted accordingly."

SRI V. R. NAGARAJAN :—" May I know whether the Government are aware of the fact that in a year lady students were admitted in the Villupuram Secondary Grade Training School and what are the reasons for discontinuing that system which was introduced as a result of great efforts put by the hon. Member representing that area? "

[23rd February 1955

THE HON. SRI C. SUBRAMANIAM :—" I have already said that I do not know that case. If a separate question is put, I shall answer it."

SRI S. R. ARUMUGAM :—" டிரெயினிங்குக்கு எடுத்து கால் வருஷ, அரை வருஷப் பரிட்சையில் பாஸ் மார்க் வாங்காமல் இருந்தால் அவர்களுக்கு அரசாங்கம் சாங்க்ஷன் செய்த ஸ்டைபெண்டை வருஷ மத்தியில் நிறுத்திவிடுகிறார்கள். அப்படி நிறுத்துவதால் அவர்களுடைய வாழ்க்கை பாதிக்கப்படுகிறது. கால், அரை வருஷ பரிட்சையில் கம்மியாக மார்க் வாங்கியிருந்தாலும், முதல் வருஷம் பாஸ் செய்யாவிட்டாலும் அடுத்த வருஷத்தில் நிச்சயம் அவர்கள் பாஸ் செய்துவிடுவார்கள். அதனால் இப்பொழுது இருக்கும் சட்டத்தை மாற்றுவதற்கு சர்க்கார் யோசிக்குமா ?"

THE HON. SRI C. SUBRAMANIAM :—" பாஸ் பண்ணுவதும் பண்ணாததும் பரீட்சையைப் பொருத்தது மட்டும் அல்ல. மாணவர்கள் ஆசிரியர்களாக இருக்க தகுதியுள்ளவர்களாக இருக்கிறார்களா அல்லது தகுதியற்றவர்களாக இருக்கிறார்களா என்றுதான் பார்க்கப் படுகிறது. பரீட்சையைப் பொருத்து மட்டும் அல்ல. ஆகவே இப்பொழுது இருக்கும் விதியே சரியானது, என்பதை கனம் அங்கத்தினருக்கு எடுத்துக் கூறுகிறேன்."

MR. SPEAKER :—" We have got only half hour more and we have got a large number of questions still to cover. I now pass on to the next question."

Bauxite and iron ores in Salem

* 853 *Q.*—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the measures proposed to be taken by the Government to exploit bauxite and iron ore in Salem?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" The Planning Commission has already been addressed for an expert study of the development of Salem iron ores and Shevaroy Bauxite deposits and to include schemes for their exploitation in the Second Five-Year Plan of the Government of India."

SRI N. K. PALANISAMY :—" இரண்டு வருஷங்களுக்கு முன்பு டால்மியா அவர்கள் அலுமினியம் பாக்டரி அமைப்பதற்கு சர்க்காரை லைசென்ஸ் வேண்டும் என்று கேட்டார். அப்படிக் கேட்கப்பட்டிருந்தும் இன்னும் அங்கு அலுமினியம் பாக்டரி ஏற்படவில்லை. காரணம் என்ன ? சர்க்கார் லைசென்ஸ் கொடுக்க மறுத்துவிட்டார்களா அல்லது அவர்களே அந்த பாக்டரியை ஏற்படுத்த வில்லையா ?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" இரண்டு வருஷங்கள் அல்ல. அதற்கு முன்பே கேட்கப்பட்டது. அப்பொழுது ஓரளவு பரிசீலனை செய்யப்பட்டது. அப்பொழுது அரசாங்கத்தினிடம் போதுமான மின்சாரம் இல்லாத காரணத்தால் அதைத் தொடர்ந்து பரிசீலனை செய்வதாக இல்லை என்று விட்டு விட்டார்கள்.'

9 a.m. SRI M. P. SUBRAMANYAM :—" தென்னார்க்காட்டில் நெய்வேலியிலிருக்கும் நிலக்கரியை எடுப்பது வெற்றியளிக்குமா அளிக்காதா என்று தெரிந்து கொள்வதற்கு குறைந்தது 7, 8 வருஷங்கள் அரசாங்கம் செலவு செய்திருக்கிறது, இப்பொழுது சேலத்தில் இருக்கும் இரும்புக் கனியை வெற்றிகரமாக எடுக்கமுடியுமா முடியாதா என்பதற்கு அரசாங்கம் ஏன் ஒருவிதமான முயற்சியும் எடுத்துக்கொள்ளவில்லை ? நெய்வேலி